SRI KANCHI KAMAKOTI PEETAM - KANCHEEPURAM









# VOICE OF KANCHI MATH

**Vol. 12 No. 2** **July 2005** **(For Private Circulation Only)**

***A QUARTERLY NEWSLETTER HIGHLIGHTING THE ACTIVITIES OF THE KANCHI MATH***



*Pujyashri Acharyas with Kalavai Sri Satchidananda Swamigal at Kalavai.*

जयति महाकाली जयति, आद्य काली माता ।
जै कराल वदने जयति, जगत मातु विख्यात ।।

*Victory to you, O Mahakali ! Victory to you, O primordial source of all beings ! Victory to you, O formidable looking goddess, who are renowned as the very mother of the world !*

माँ तव चरण प्रगट श्री शंकर ।
रसना बाहर वदन भयंकर ।।
धनि-धनि कलकत्त की काली ।
सहस्रभुजी श्री शिवपुर वाली ।।

*O Mother Kali ! It is your divine feet that made Siva's appearance possible in the world; you have long protruding tongue and a frightening look. Blessed, all blessed are you, O Mother Kali of Calcutta, who are thousand-armed and who have your abode in Sivapura.*

**Jagadguru Pujyashri Jayendra Saraswati Swamigal and Jagadguru Pujyashri Sankara Vijayendra Saraswati Swamigal of Sri Kanchi Kamakoti Peetham will be observing the Chaturmasya Vratam and Vyasa Puja on 21st July 2005 at Sankara Math – Paduka Mandapam, Ramakrishna Road, Alipiri, Tirupati, Andhra Pradesh.**

The Chennai Silks®
THE LARGEST TEXTILE KINGDOM IN TAMILNADU
Chennai • Coimbatore • Tirupur • Erode • Trichy

தி சென்னை சில்க்ஸ்®
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்
சென்னை • கோயமுத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி



*The procession with Sri Mahaswamigal's portrait at Kalavai on 14.5.2005*



*A grand welcome to Pujyashri Acharyas at Kanchi on 8.6.05*



*The Acharyas being offered shawls and garlands and welcomed at Kanchi (8.6.2005)*



*The Acharyas entering the Kanchi Math (8.6.2005)*

## THUS SPAKE THE MAHASWAMIGAL

The *Veda* is eternal. The sages endowed with divine vision imparted it to us. The *Veda* has come to tell us of that which cannot be proved, that which cannot be reached by the intellect. The *Veda* makes known that which is supersensuous.

All those who have listened to what has been said about the *Veda* should perform some obligatory duty. The Brahmins should perform *Brahma-yajna* everyday. This is one of the five *maha-yajinas*. *Brahma* (in the present context) means the *Veda*. We should perform *Brahma-yajna* so that the power of *mantra* will shine like perennial lamp. *Tarpana* should be offered to the *Maharsi* pertaining to the *sakha* which one has to study. After this, at least two *aksaras* of the *Veda* should be recited. Even if this becomes impossible, *Gayatri-japa* should be done without fail. *Gayatri* is the quintessence of the *Veda*. It is laid down that only after being initiated into *Gayatri* one should begin the recitation of the *Veda*. The *Gayatri* should be recited everyday a thousand times. If there is no time for this, the *mantra* should be recited at least ten times. The *Gayatri-mantra* will produce the quietude of mind. The deity of the *mantra* is Surya (Sun God). The day dedicated to Surya is Sunday. Conveniently this happens to be the weekly holiday. Therefore, on that day one should get up from bed at 4.00 O'clock, and do *Gayatri-japa* a thousand times. This would bring about welfare. This is what I would say to you.

***– From discourse given on 25th October, 1932.***

**ASARC Library solicits donation of books**

The Adi Sankara Advaita Research Centre, Mylapore has established a Library at Old No.98/99 (New No.148-150), Luz Church Road, Mylapore. The Library is equipped with various books on Indian Philosophy, Hinduism and works of Adi Sankara. Members of the public are requested to make use of the Library. Donations in the form of ancient and rare books on philosophy, Sanskrit works, etc., will be gratefully acknowledged.

***Visit our website: www.advaitacentre.org***

# ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் மடத்தின் பூஜா மற்றும் விழாக்கள் கொண்டாடிய விபரம்

மௌனம், தியானம், தியாகம் மூன்றும் சேர்ந்ததே கலவை. இங்குதான் 66-வது, 67-வது பீடாதிகளின் அதிஷ்டானம் உள்ளது. நடமாடும் தெய்வம் என்று வணங்கப்படும் ஸ்ரீ மடத்தின் 68-வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் துறவறம் பூண்ட இடமும் கலவைதான். இக்கலவையின் மொத்த பரிணாமந்தான் நம் ஸ்வாமிகள். **"இருள் நீக்கி தந்த ஒளி விளக்கு"** இன்று கலவையில் பிரகாசிக்கின்றது. குருதான் நமக்கெல்லாம் வழிகாட்டி. அன்பும், கருணையும் கொண்டு எந்த நிலையிலும் எந்த நேரமும் இரண்டு குருமார்கள் பரிபூரணமாக ஆசீர்வதிக்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளாணைப்படி ஸ்ரீ மடத்தின் காரியங்களும், சமூக நற்பணிகளும் புத்துணர்வுடனும், புதுப்பொலிவுடனும் இந்தியாவின், இந்து மதத்தின் இருதயமாக இயங்கி வருகிறது.

நம்முடைய இந்து சமயம் யாராலும் அழிக்க முடியாதது. ஏனென்றால் அது ஒருவராலும் தோற்றுவிக்கப்படவில்லை. தோன்றியிருந்தால் தானே அது அழியக்கூடியது ஆகும்? ஆனால் நம் சமயமோ சுயம்புவான சமயம்.

சமயப்பணியே சமூகப்பணியாவும், சமூகப்பணியே சமயப்பணியாகவும் உலக மக்களின் க்ஷேமத்திற்காக தன்னை ஈந்து, தவம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் அவர்களின் திருவளப்படி ஸ்ரீ மடத்தில் நடைபெற்ற பூஜா மற்றும் விழாக்களின் விபரம் வருமாறு:-

வழக்கமான அனுஷ்டானங்களும், உற்சாகத்துடனும், பூஜைகளும், விழாக்களும், பாராயணங்களும், கருத்தரங்குகளும், பஜனைகளும், திருவிளக்கு பூஜைகளும், இசைக்கச்சேரிகளும், அன்னதான வைபவங்களும் நடந்தேறி வருகின்றன. அன்பர்களுக்கு ஆன்மீக முன்னேற்றத்தை வழங்கி வருகின்றன.

கலவை ஸ்ரீ மடம் நாளும் நாளும் திருவிழாக்கோலம் கொண்டு பக்தர்களின், ஆன்மீகத்தொண்டர்களின், பொதுமக்களின் கூட்டத்தால் நிரம்பி வழிந்தபடியாய் உள்ளது.

குடும்ப நற்காரியங்களுக்காகவும், ஊர்ப்பொதுக் காரியங்களுக்காகவும், கோயில் திருவிழாக்களுக்காகவும், கோயில் திருப்பணிக்களுக்காகவும், கும்பாபிஷேக (குடமுழுக்கு) விழாக்களுக்காகவும் சுவாமிகளின் அருளாசியைப் பெற திரள்திரளாக வருவோர் கூட்டம் அதிகரித்து வருகிறது.

குருவின் பாத கமலங்களை பக்தியுடன் வணங்கினால் அதுவே வாழ்வின் பெரும் பாக்கியம்.

கலவையில் 'காலடி' எடுத்து வைத்ததும் பாவங்கள் விலகும். வறுமையும், துன்பமும் ஸ்ரீ பெரியவர்கள் பாதத்தில் வணங்கினால் மன சாந்தியும் மகிழ்வும் அடையலாம் என்ற நம்பிக்கையோடு ஸ்வாமிகளை தரிசித்து ஆசிபெறுகிறார்கள்.

நாள்தோறும் ஸ்வாமிகள் இருவரும் தரிசனம் தந்து ஆசி வழங்குகின்றனர். பல்வேறு நகரங்களில் இருந்தும், கிராமங்களில் இருந்தும் மக்கள் வந்த வண்ணமாய் உள்ளனர். நாட்டின் எல்லாப்பாதைகளும், சாலைகளும் கலவையை மையப்படுத்தி இயங்கிக் கொண்டுள்ளன என்று கூறத்தக்க அளவில் ஸ்ரீ மடம் பழுத்த மரமாய், நல்ல நீருள்ள குளமாய் பலருக்கும் பயனளித்து வருகின்றது.

கலவையில் 69-வது பீடாதிபதியாக ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், 70-வது பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் தங்கி கலவையின் சுற்றுப்புறமுள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று மக்கள் சேவையே மஹேசன் சேவை என்ற நோக்கும் பல அறிய சேவைகள் செய்து மக்களுக்கு ஆசி வழங்கி வருகிறார்கள். அதனால் கலவை தெய்வத்தன்மை மிகுந்த ஸ்தலமாக விளங்குகின்றது. தினம் தினம் நூற்றுக்கணக்கான கிராம மக்கள் வந்து தரிசனம் செய்து போகின்றனர்.

## கலவையில் நடக்கும் சில தெய்வீகப்பணிகள்

கலவை பிருந்தாவன் பக்கத்தில் ஐயப்ப ஸமாஜம் இடத்தில் டாக்டர் ராமச்சந்திரன் சேவையால் ஒரு இலவச மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடந்து வருகின்றது. தினம் சுமார் 100 நோயாளிகளுக்கு

இலவச சிகிச்சை செய்யப்பட்டு மருந்தும் இலவசமாக கொடுக்கப்படுகிறது. கலவைக்கு பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து பல நோயாளிகள் பயனடைகிறார்கள். காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை சிகிச்சை நடக்கிறது. ஸ்ரீ மடம் சார்பில் இந்த மருத்துவமனை நடந்து வருகிறது.

ஸ்டேட் பாங்கிலிருந்து ஓய்வு பெற்ற திரு வீரராகவன் மூலம் தொழில் முனைவோர்க்கான பல்வேறு பயிற்சிகள் ஸ்ரீ மடத்தின் சார்பில் ஆண், பெண் இருபாலர்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சொந்த தொழில் செய்து வருமானத்தை பெருக்க வேண்டும் என நினைப்பவர்க்கும், படித்து வேலை இல்லாதவர்க்கும், இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊதுவத்தி செய்தல், பினாயில், துணி துவைக்கும் சோப், பாத்திரம் தேய்க்கும் பவுடர், மெழுகுவர்த்தி போன்ற பல பொருள்கள் தயாரிக்க செய்முறைகள் மிகவும் விளக்கமாக பயிற்சி தந்து பேருதவி செய்து வருகின்றனர். நூற்றுக்கணக்கானோர் பயனடைந்து நம்பிக்கை பெற்று நலமுடன் வாழ்கின்றனர்.

மிகவும் நலிவடைந்த ஏழை பெண்களுக்கும் ஒரு இலவச தையல் வகுப்பு ஆரம்பித்து மிகவும் நல்ல முறையில் நடந்து வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கு பயன் தரத்தக்க வகையில் நோட்டு புத்தகங்கள், பேனா, டாடகுறிப்புகள், நீதி நூல்கள். மற்றும் அவர்களுக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## அண்மையில் நடந்த விழாக்கள்

## சிவராத்திரி விழா (8/3/2005)

8-3-2005 சிவராத்திரியன்று ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளால் ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் பூஜை நான்கு கால பூஜைகள் நடைபெற்றன. ஆயிரக்கணக்கானோர் பூஜையை பக்திப் பரவசத்துடன் கண்டு ஆன்ம லாபம் பெற்றனர். விழாவிற்கு முன்னதாக பத்திரிக்கைகளில் அறிவித்திருந்தவாறு நமசிவாய ஐந்தெழுத்து மந்திரத்தை 108 முறை எழுதி அனுப்பியவர்களுக்கு சிவபெருமானின் திருவுருவப்படமும், சிவபுராணம் நூலும், பிரசாதங்களும் அஞ்சலில் அனுப்பப்பட்டன. ஸ்ரீ ஸ்வாமிகள் இருவரும் மக்களுக்கு தரிசனம் தந்து அருளாசியும் வழங்கினர்.

## ஸ்ரீ ராமநவமி

கடந்த 17-4-2005 ஞாயிறன்று ஸ்ரீ ராமநவமி கொண்டாடப்பட்டது. விழாவிற்கு முன்னர் செய்தித்தாள்களில் அறிவித்தப்படி கம்ப ராமாயண பட்டாபிஷேக படலத்தில் 'அரியணை அனுமன் தாங்க' என்ற பாடலை எழுதி அனுப்பியிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு ஸ்ரீராமர் படமும், பிரசாதமும் அஞ்சலில் அனுப்பப்பட்டது. ஸ்ரீ ராம பஜனைகளும், நாதஸ்வர கச்சேரியும் நடைபெற்றன. பிற்பகல் நிகழ்வில் "ஒழுக்க நெறியை கூறுவது இராமாயணமா? மகாபாரதமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இப்பட்டிமன்றம் நிகழ்விற்கு கலவை சச்சிதானந்தா சுவாமிகள் முன்னிலை வகித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் இருவரும் பங்கேற்று ஆசி வழங்கினர்.

## திருவிளக்கு பூஜை

தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த பெண் பக்தைகளால் (24-4-2005) சித்ரா பௌர்ணமியன்று 1008 திருவிளக்கு பூஜைகள் நடைபெற்றன. மங்கலகரமான மந்திர முழக்கங்களுடன் கூடிய மாலைப்பொழுதாக அமைந்தது. 1008 பேருக்கும் மங்கலப்பொருட்கள், பிரசாதங்கள், அன்னதானம் வழங்கப்பட்டது. ஸ்ரீ ஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகளும், ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் பக்தர்களுக்கு தரிசனம் தந்து ஆசி வழங்கினர். அன்று இரவு சுமார் 40 நாதஸ்வர வித்வான்கள் கச்சேரி நடந்தது. வித்வான்களுக்கு பொன்னாடை போட்டு கௌரவிக்கப்பட்டார்கள். இந்து முன்னேற்ற கழகம் இந்த ஏற்பாடுகளை செய்து சிறப்பித்தது.

## ஸ்ரீ சங்கர ஜெயந்தி

பகவத் பாதாள் ஆதிசங்கரரின் ஜெயந்தி 13-5-2005 அன்று கலவை ஸ்ரீ மடத்தில் அதிவிமரிசையுடன் கொண்டாடப்பட்டது. காலையிலிருந்தே பல்வேறு ஊர்களில் இருந்து வந்த கிராம பஜனைக்குழுக்கள் பாடல்களைப் பாடினர். இசைமழையில் ஸ்ரீ மடம் குளிர்ந்தது.

பிற்பகலில் ஆதிசங்கரரின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படம் கலவையின் மாட வீதிகளில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள் இருவரும் ஊர்வலத்தில் நான்கு மாட வீதிகளிலும், நடந்து வந்து ஆதிசங்கரர்பால் கொண்டுள்ள பக்தியையும், மக்களின்பால் கொண்டுள்ள கருணையையும், அன்பையும் வெளிப்படுத்தினர். இச்செயல்

பொதுமக்களின் பக்தர்களின் நெஞ்சத்தை உருக்குவதாய் இருந்தது. கலவை ஆன்மீகத்தில் புத்துணர்வும், புதுப்பொலிவும் பெற்றுள்ளதாய் மக்கள் கருதுகின்றனர்.

ஊர்வலத்தில் 50 நாதஸ்வர மங்கல இசையுடனும், பஜனைப் பாடல்கள் பாடிக்கொண்டும், "ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர" என்னும் மந்திர முழக்கங்களை முழங்கிக்கொண்டும் உற்சாகத்துடனும் சென்றனர். கலவை மக்கள் இதுவரை கண்டிராத பெரும் மகிழ்ச்சியையும், வியப்பையும், தரிசனத்தையும் இந்த நிகழ்ச்சி வழங்கியது.

கலவை மண் பெற்ற புண்ணியம் - மாட வீதிகள் செய்த புண்ணியம் - கலவை மக்களின், பக்தர்களின் மகா புண்ணிய நிகழ்வாக மக்களின் கருத்தும் எண்ணமுமாக இருக்கிறது.

## ஞானதீபம் - ஆசிரியர்களுக்கான பயிற்சி

ஸ்ரீ சங்கர ஜெயந்தி விழாவின் ஒரு நிகழ்வாக ஞானதீபம் சமயப்பயிற்சி முகாம் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டது. இப்பயிற்சி 10-5-2005 முதல் 14-5-2005 வரை 5 நாட்கள் கலவை இராமகிருஷ்ணா பள்ளியில் நடைபெற்றது. தமிழகம் முழுவதிலும் இருந்து ஆசிரியர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

ஞானதீபப் பயிற்சியில், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள், சைவ சித்தாந்த வினா-விடை விளக்கங்கள், விதுர நீதி, புராண இதிகாசங்களில் (குருமார்களின்) ஆசிரியர்களின் தலைமைப்பண்பு, தினசரி வாழ்வில் ஒழுக்க நெறி, நீதி போதனைக் கல்வியின் அவசியம், குழந்தைகள் உளவியல், கற்றல், கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் ஆகிய தலைப்புகளில் அறிஞர் பெருமக்களால் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

14-5-2005 அன்றைய நிறைவு விழாவில் ஸ்ரீ ஜயேந்தர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் பங்கேற்று பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி அருளுரையும், அருளாசியும் வழங்கினார்கள்.

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவர் ஜெயந்தி

ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் 112-வது ஜெயந்தி 14-5-2005 அன்று கலவை ஸ்ரீ மடத்தில் வெகு விமரிசையாக பக்திப் பெருக்குடன் கொண்டாடப்பட்டது. காலை வேளை 7-00 மணியிலிருந்தே பஜனை கோஷ்டிகள் வருகை தர தொடங்கின. பல ஊர்களிலிருந்தும் பல குழுக்கள் இப்பஜனையில் பங்கேற்று பாடினர். திட்டமிட்டபடி அவர்களுக்கு பாடிட வாய்ப்பளிக்கப்பட்டது.

பல்வேறு குழுக்களின் பஜனைகளும், கோலாட்ட குழுக்களும், வேடம் தரித்து ஆடுவோர்களும், நாதஸ்வர குழுக்களும், ஊர்வலத்தை சிறப்பாகவும், மகிழ்வாகவும் மாற்றின. புஷ்ப அலங்காரத்துடன் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாமிகளின் திருவுருவப்படம் கலவை பேரூராட்சியின் அனைத்து மாட வீதிகளிலும் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஊர்வலத்துடன் எழுந்தருளி மக்களுக்கு தரிசனமும், அருளாசியும் வழங்கினர். இவர்களுடன் கலவை சச்சிதானந்தா சுவாமிகளும் ஊர்வலத்தில் பங்கேற்றார்.

ஆயிரக்கணக்கானவர்கள் "ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர" முழுக்கத்துடன் ஊர்வலத்தில் பங்கேற்று மகிழ்ச்சியும், ஆசியும் பெற்றனர். அன்று முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பல ஊர் பஜனைக் குழுவினருக்கு மிருதங்கம், தாளங்கள் வழங்கப்பட்டன.

"ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !" இம்மந்திர முழக்கத்தை 1008 முறை எழுதி அனுப்பியவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் படமும், பிரசாதங்களும் வழங்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் பிரசாதம் பெற்று மகிழ்வடைந்தனர். இதில் வெளிநாட்டு அன்பர்களும், இந்தியா முழுவதிலும் குறிப்பாக கேரளா, மேற்கு வங்காளத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எழுதியனுப்பி பரவசமடைந்தனர்.

## தமிழர் பண்பாட்டு பேரவை

நம் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும் கிராம முன்னேற்றமே ஒவ்வொரு திட்டத்திலும் சேர்க்கபட்டாலும் கிராம வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும், கடவுள் பக்தியிலும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கும் விதத்தில் எந்த திட்டமும் எந்த அமைப்பும் இதுவரை செயல்படாததால் இப்பொழுது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆசிர்வாதத்துடன் தமிழர் பண்பாட்டு பேரவை என்ற பெயரில் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர்கள் 10 பேருக்கு குறையாமல் மாதர்

சங்க அமைப்புகளும் கூட முன்வரவேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய பணிகள் பற்றி குறிப்புகள் அனுப்பி வைக்கப்படும். அதை வைத்து கிராம மக்கள் எல்லாம் (குறிப்பாக பின் தங்கிய தாழத்தப்பட்ட ஆதிவாசிகள்) இதில் ஈடுபட்டு நம்முடைய தமிழர்கள் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும், தமிழர் பண்பாடு நல்லொழுக்கம் போன்றவைகளையும் வளர்த்துக் கொண்டு நம்முடைய ஒவ்வொருவர் வாழ்விலும் பரம்பரையாக வந்த தமிழர் பண்பாட்டு முறைகளை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதில் ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியவர்களின் பங்கு மிக மிக முக்கியமானதும், தேவையானதும் ஆகும். ஆகவே ஆசிரியர்கள் பெருமளவு ஒவ்வொருவரும் கீழே கொடுத்துள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். இதற்கு வேண்டிய எல்லா உதவிகளும் செய்து கொடுக்கப்படும். விலாசம்: செயலாளர், தமிழ் பண்பாட்டு பேரவை, 98/99, புதிய எண் 148/150, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-4.

## பாரத் (தமிழக) கோவில் பாதுகாப்பு மையம்

பாரத தேசத்தின் பெருமையே நம் தேசத்தின் பெரிய பெரிய தபஸ்விகளாலும், மஹரிஷிகளாலும், சித்தபுருஷர்களாலும், ஞானிகளாலும், கோவில்களாலுமே இன்றும் இருந்து கொண்டு இருக்கின்றது. பாரத நாட்டில் பல அன்னிய மதஸ்த்தர்கள் ஆண்டார்கள். அப்போது பல கோவில்கள் இடிக்கப்பட்டன என்று வரலாறு கூறுகிறது. ஆனாலும் இந்துக்களின் பக்தி எழுச்சியிலே மீண்டும் நிறைய கோவில்கள் கட்டப்பட்டன. ஆனால் சமீபகாலமாக இந்துக்களிடையே பக்தி வளர்ந்தாலும் கோவில்களை புதுப்பித்தல், நித்யபூஜைகள் நடப்பது போன்றவைகளில் முன்பு இருந்தது போல் அத்தனை ஆர்வம் காணப்படவில்லை. ஆனால் புது புது கோவில்கள் பல இடங்களில் கட்டி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக 20, 30 அடி ஆஞ்சநேயர், காளியம்மன் இது மாதிரி புதுமையான கோவில்களை துவக்கி வருகிறார்கள். நகரத்தார்கள் நாட்டு கோட்டை செட்டியார்கள் சில காலம் முன்பு வரை அநேகமாக எல்லா கோவில்களையும் திருப்பணி செய்து வந்தார்கள். தற்போது அவர்கள் செய்யும் திருப்பணி குறைந்து காணப்படுகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிவன் கோயில், ஒரு விஷ்ணு கோவில், ஒரு கிராம தேவதை கோவில் என்று மூன்றும் இருக்கும். சமீப காலமாக ஜாதி கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. பிள்ளையார் கோவில் முதல் பல பழைய கோவில்கள் மிகுந்த மோசமான நிலையில் உள்ளன. தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்கள் சில காலமாக பஜனை மாத்திரம்தான் பண்ணிக் கொண்டு இருந்தார்கள். மற்ற ஜாதி மதத்தினர் மாதிரி நாமும் கோவில் கட்ட சாமி கும்பிட வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்து விட்டது. இப்படியாக ஒவ்வொரு கிராமத்திற்கும் பழைய கோவில்கள் மூன்றும் புதிதாக ஏழு, எட்டு கோவில்கள் சேர்ந்து சுமார் 10 கோவில்களாக விட்டன. ஜாதி கோவில்கள் கட்டியபின், அதை தொடர்ந்து பூஜைகள் ஏற்பாடு செய்யவும், திருப்பணி செய்து நல்ல முறையில் வைத்துக் கொள்ள ஆர்வம் ஏற்படவில்லை. ஹரிஜன மக்களால் பஜனைகோவில்களிலும் திருப்பணி செய்ய முடியவில்லை. புதிய கோவில்கள் கட்ட ஏற்பாடு செய்பவர்கள் பாதியில் கட்ட முடியாமல் சிரமப்படுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக்கொண்டு இருப்பவர்கள் சர்ச் கட்டி ஹிந்துக்களை மதம் மாற்றம் செய்து தங்கள் வசம் சேர்த்துக் கொள்கிறார்கள். முஸ்லீம்களும் 10 பேர் இருந்தாலும் ஒரு மசூதி கட்டி விடுகிறார்கள். இந்த நிலையில் ஜாதி கோவில்களை கட்டுக்கோப்புடன் திருப்பணி செய்தாலும் பரம்பரையாக வந்த சிவன், பெருமாள், கிராம தேவதை இந்த மூன்று கோவில்களும் கவனிப்பார் அற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. இந்த நிலை தமிழகத்திலும் பாரத நாட்டில் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. தற்போது உள்ள சூழ்நிலையில் பல பேர் தங்கள் கிராமத்தை விட்டு நகரத்திற்கோ, வெளிநாட்டிற்கோ சென்று விடுகிறார்கள். பாரத நாட்டிற்கு வரும் போது வீட்டு விசேஷங்களின் போது படையல் செய்து விட்டு வருகிறார்கள். மற்றபடி கோவில்கள் திருப்பணி செய்யவும், நித்ய பூஜைகள் நடத்தவும் யாரும் முன்வருவதில்லை. ஆகவே நம்முடைய நாட்டிற்கு ஆதாரமாகவும், நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய, தேசம் முழுவதும் சுபிக்ஷமாக இருப்பதற்கு கோவில், கோவில் பூஜை, கும்பாபிஷேகம் முதலியவை இன்றியமையாதது.

இந்த எண்ணத்தோடு **பாரத் கோவில் பாதுகாப்பு மையம்** என்ற பெயருடைய ஒரு அமைப்பை துவங்கி இருக்கிறோம். உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் வசிக்கும் பக்தர்கள் இந்த அமைப்பிற்கு தாராளமாக நன்கொடை அளிப்பதுடன் விசேஷமாக தங்கள் கிராமத்தை சேர்ந்த கோவில்களுக்கு சிறப்பாக நடைபெற உதவினால் அதையும் குறித்து நன்கொடையும் அனுப்பினால் அந்த கோவிலுக்கு வேண்டியதை செய்யப்படும். இது ஒரு தெய்வீக தொண்டு. ஆகவே நம்முடைய கிராம கோவில் திருப்பணி புண்யத்தை பலனாக விரும்புவர்கள் இதற்கு நிதி உதவி செய்து ஈஸ்வரன் அநுக்கிரஹத்தை முழுமையாக பெற முடியும்.

# Mahaswamigal's 112th Jayanti Celebrations at Chennai



*The Acharya blessing the devotees assembled at the Mahaswamigal's 112th Jayanti function on 29.5.05 organised by ASARC.*

Jagadguru Pujyashri Jayendra Saraswati Swamigal was accorded a warm and reverential welcome with purna kumbham and veda ghosham on the occasion of the 112th Jayanti Celebrations of Pujyashri Mahaswamigal organised by Adi Sankara Advaita Research Centre at the Sivakami-Pethachi Auditorium, Luz Church Road, Mylapore on 29.5.2005. Devotees of the Kanchi Math had assembled in large numbers to have darsan of the Acharya.

Sri C.N. Ramachandran, President, ASARC welcomed the Acharya and all those assembled while Dr. Revathi, Professor of Sanskrit, University of Madras introduced the speakers of the evening, Prof. R. Balasubramanian, former Chairman of the Indian Council of Philosophical Research and Prof. N. Veezhinathan, former Head, Dept. of Sanskrit, University of Madras.

Describing the Mahaswamigal as an *avatara purusha*, Prof. Balasubramanian likened the Sage of Kanchi to Adi Sankara and observed that Karmayoga and Gnanayoga had a happy blend in him. He was a teacher nonpareil and was capable of explaining the abstract philosophical concepts of Advaita in a language at once simple and understandable by the common man by reference to verses from Tirumandiram. Mahaswamigal's encyclopedic knowledge of the spiritual wisdom of India and Sanatana Dharma in all its aspects found expression in his discourses and they have been faithfully compiled into six volumes captioned "Deivatthin Kural" and it behoves the present generation to study the books and attain enlightenment.

Prof. Veezhinathan, in a reminiscent mood, declared that having been associated with the Kanchi Math ever since he was a child, his guru bhakti "has entered into the essential structure of the bones". It would indeed be a great misfortune for one to escape the grace of Mahaswamigal and a greater loss not to heed his teachings. The sage's eminence lies in his utter simplicity eventhough he possessed high spiritual prowess. He described Mahaswamigal as one who saw and heard even without eyes and ears. He was the very incarnation of Truth, the very essence of God's creation. He had entered the soul of Goddess Saraswati and it was indeed a great blessing for the country to have had him in our midst.

Jagadguru Pujyashri Jayendra Saraswati Swamigal in his Anugraha Bhashanam mentioned that one should be fortunate to be born as a human being as it provides a rare opportunity to advance in life by revering one's parents, guru and personal God. He referred to the rather brief life of Adi Sankara and his achievements in restoring vedic religion to its ancient glory and the resultant renaissance of Sanatana Dharma. Adi Sankara established shanmatas and was responsible for idol worship. He was an exemplar of a Karma yogin, Bhaktiyogin and Gnanayogin. Bhaktiyoga and idol worship are more suited to this age for they promote mental peace. Coming in the uninterrupted succession of acharyas of the Kanchi Kamakoti Peetham, Pujyashri Mahaswamigal took to the ascetic order at the young age of 13 and traversed the entire Bharata Varsha by foot and his contributions for the revival of Hinduism were as significant as those of Adi Sankara.

When once confronted as to how he fitted into the appellation 'Jagadguru', Mahaswamigal, in all humility, declared that he learnt a great many things from the world which he considered as his guru.

"He once confided in me that there were three unfinished tasks viz. visiting Kaladi, the birth place of Adi Sankara and construction of a memorial, construction of a mandapa at Triveni Sangam at Allahabad and visiting Badrinath-Kedarnath in the Himalayas. I have fulfilled these wishes by constructing a Jaya Sthambham at Kaladi, a mandapa at Triveni Sangam and visiting the hill shrines at Badrinath-Kedarnath. The Jayanti is an appropriate occasion to remember the Sage of Kanchi and receive his blessings."

The Acharya lauded the efforts of the Adi Sankara Advaita Research Centre in publishing the Journal, **"Voice of Sankara"** besides publication of rare works of Adi Sankara and conduct of seminars and lectures on philosophical topics. He blessed all those who had assembled for the Jayanti function.

Earlier, Ragam Sisters (Ms. Sivaranjani - Ms. Nalinakanti) and party rendered devotional songs.



*Pujyasri Jayendra Saraswati Swamigal blessing the music artistes at Chennai on 29.5.2005.*



## DAKSHINESWAR KALI TEMPLE

Dakshineswar Kali Temple is situated on the banks of River Ganga alongside the Vivekananda Bridge North of Kolkata. This temple was built by Rani Rashmoni between 1847 and 1855 A.D. The 12-spired temple with its enormous courtyard is surrounded by 12 other temples dedicated to Lord Shiva and Radhakrishna. The beautiful idol of Goddess Kali facing south has been installed at the temple sanctum sanctorum, on a 1000-petalled lotus, on Lord Shiva's chest. The benign Goddess is also known as Bhavatarini.

This temple is famous for its association with Shri Ramakrishna Paramahamsa who achieved his spiritual vision at this place and preached the unity of all religions.

Compiled by G. Natarajan on behalf of Adi Sankara Advaita Research Centre, New No.17 (8A), Bishop Wallers Avenue (West), Mylapore, Chennai - 600 004. Phone: 24990459. Fax: 24994510, and printed by R. KALIDASAN at Gopali Printers, Quanta Zen Apt., No.38 (Old No.2), Thomas Road, Off South Boag Road, T.Nagar, Chennai - 600 017. Phone: 24330979/52024951.